உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஸாமான்ய தர்மங்கள்

ப்ரசுரம் 11

ஸர்வஜித் ளு

ஐப்பசிமீ 1 உ, வெள்ளிக்கிழமை
17-10-1947

வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை, கும்பகோணம்

உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஸாமான்ய தர்மங்கள்

எல்லாருக்கும் பொதுவான தர்மங்கள் இன்னவை என்பது மனுதர்ம-
சாஸ்த்ரத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

சுஹிம்ஸ ஸத்ருஜஸ்தெயம் ஷொஉம் ஐநுஷ்ர யநிமூஹஃ ॥ (மனுஸ்ம்ருதி)

(அஹிம்ஸா ஸத்யமஸ்தேயம் சௌசம் இந்த்ரியனிக்ரஹ:)
அஹிம்சை, ஸத்யம், அஸ்தேயம், (திருடாமை), சௌசம் (சுத்தி), இந்த்ரிய நிக்ரஹம், இந்த ஐந்தும் மிகவும் முக்கியமானவை. வேதத்தில் மாத்ருபக்தி, பித்ருபக்தி, குருபக்தி, தெய்வபக்தி முதலியவைகளும் ஸாமான்ய தர்மங்களாகச் சொல்லப்பட்டிருக்கினறன.

இந்த ஐந்தையும்பற்றி யோசிக்கலாம்:-

1. அஹிம்ஸை: அஹிம்ஸை என்பது எல்லாருக்கும் வேண்டியது. ஓர் எறும்பைகூட நாம் கொல்லக்கூடாது. யாருடைய சரீரத்துக்கும் ஒரு கஷ்டத்தையும் உண்டுபண்ணக் கூடாது. அது தான் அஹிம்ஸை. இந்த அஹிம்ஸையை யோகஸாதனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

யோகம் என்பது என்ன? மனதை நிறுத்துதல் தான் யோகம்.

யொமஶ்உித்தவ்ருகதி நிரொயஃ ॥

(யோகஸ்சித்தவ்ரத்தி நிரோத:)
மனதில் ஆசையுண்டாகிறது. பல விஷயங்களை அது நினைக்கிறது. அதனால் அனெகவிதமான கஷ்டங்களும் உண்டாகின்றன.

உந ஹவ உநுஷ்ராணாம் கூாஜணம் பநூொகூயொஃ ॥

(மன ஏவ மனுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ)
பந்தத்துக்கும் மோக்ஷத்துக்கும் மனது தான் காரணம் என்பது தாத்பர்யம். நாம் நமது மனம் எப்படி இருக்கவேண்டுமென்று நினைக்கிறோமோ அப்படி அது இருக்கிறதில்லை. நாம் ஒரு வஸ்துவை நினை என்றால் அது வேறு எங்கே யாவது போய் நிற்கிறது. ஒன்றையாவது நினைக்காமலிரு என்றால் அது முடியவே முடியாது. பேசாமல் இரு என்றால் வாய் பேசாமல் இருக்கும். கண்ணைப் பார்க்காதே என்றால் அது பார்க்காமலிருக்கும். மனதை நினையாமலிரு என்றால் அப்படி இருப்பதில்லை. மனது நம்முடைய ஸ்வாதீனத்தில் இல்லை. நமக்கு மனது வசப்படவில்லை. நமக்கு உண்மையில் மனது ஸ்வாதீனமாக இருந்தால் நம்முடைய இஷ்டப்படி அது நடக்க வேண்டும். நினைக்காதே என்றால் நினைக்காமல் இருக்கவேண்டும். ஆனால்

நாம் எதை நினை என்கிறோமொ அதை விட்டுவிட்டு விபரீதமான ஒன்றைத்தான் அது நினக்கிறது. பைத்தியம் பிடித்தவன் மௌனமாக இருப்பதில்லை. வாயினால் எதையாவது கத்திக்கொண்டே இருப்பான். அவன் வாயை அடக்க முடிவதில்லை. அதுபோல நாம் மனதை அடக்க முடிவதில்லை. நாம் மனத்தில் பைத்தியமாக இருக்கிறோம். நமக்குப் புத்தி ஸ்வாதீனம் இருந்தால் நாம் சொன்னபடி அது கேட்கவேண்டும். நினை என்றால் நினைக்க வேண்டும். நில் என்றால் நிற்கவேண்டும். அப்பொழுது தான் அது நாம் சொன்னதைக் கேட்பது ஆகும். நமக்கு எங்காவது வலி உண்டானால் மனதுக்குத் தெறிகிறது. அப்பொழுது வலிக்கிறதென்று நினைக்காதே என்றால் அது கேட்கவேண்டும். அது புத்திஸ்வாதீனம். புத்தி ஸ்வாதீனமானால் கஷ்டமில்லை என்று நினைக்கமுடியும். புலி ஒன்று பயமுறுத்தினால் பயமுறுத்தாதது போல் இரு என்றால் மனது இருக்கும், அழு என்றால் அழும். அழாதே என்றால் அழாது. அழுவதற்குக் காரணமில்லாத பொழுது கூட இப்பொழுது நமது மனம் அழுகிறது. அப்பொழுது அழிகிறதற்குக் காரணம் இருந்தால் அழாதே என்றால் அழாமல் இருக்கும். இவ்வாறு இருப்பது 'நிரோதம்' எனப்படும். அப்பொழுது கோபிக்காதே என்றால் அவ்வாறு இருக்கும்.

இப்பொழுது நமக்கு வாய்கூட முழுவதும் கட்டுப்படுவத்ல்லை. எதையாவது கன்னா பின்னாவென்று பேசிவிட்டு, "இப்படிப் பேசிவிட்டோம்!" என்று பின்பு வருத்தப்படுகிறோம். பைத்யத்துக்கும் நமக்கும் கொஞசந்தான் வித்யாசம் இருக்கிறது. பைத்யதியம் கூட "என்னமோ சொல்லுகிறேன்" என்று சில சமயங்களில் சொல்லுவது உண்டு. திடீரென்று பயமடைகிறோம். கோபம் கொள்கிறோம். இவற்றையெல்லாம் போக்குவதற்கு மனதையடைக்க வேண்டும்.

இவ்வாறு மனது அடங்கி நிற்பதைத் தைலதாரை போன்றது என்பார்கள். அவிச்சின்னஸந்தானமாகப் பார்க்கவேண்டும். மனது ஸ்வாதீனப்பட்டுவிட்டால் அது ஈசவரனைப் பார்ப்பதை விட மேலானது. ஈச்வரனைப் பார்த்தால் ஆனந்தம் உண்டாகிறது. அந்த ஆனந்தத்தில் இரு என்றால் மனது இருந்துவருகிறது. ஸ்வாமி யாகவே இருந்துவிடு என்றால் இருந்துவிடும். இன்னமும் எது சொன்னாலும் கேட்கும். அது தான் யோகம்.

நமக்கு எதை நினைத்தால் ஸௌக்யம் உண்டாகுமோ அதை நினைக்காமல் மற்றவற்றை நமது மனது இப்பொழுது நினைக்கிறது. என்ன பண்ணினால் இந்த மனது ஸ்வாதீனத்துக்கு வரும்? கொஞ்சம் கோபித்துக்கொள் என்றால் கோபித்துக்கொள்ள வேண்டும்; கூடாது என்றால் சும்மா இருக்கவேண்டும். இதற்கு ஒரு வழி தேடவேண்டும். அதையும் இறப்படற்குள் தேடவேண்டும்.

தஔோ௦ விதுநஜூத ஐஹ ஹவதி ॥ (புருஷஸூக்தம்)

(தமோம் வித்வனம்ரத இஹ ஹவதி :) என்று வேதம் சொல்லுகிறது.

ஶக்நோதீஹைவ யஃ ஸோடும் ப்ராக்ஶரீரவிமோக்ஷநாத் ।

காமக்ரோதோத்பவம் வேகம் ஸ யுக்தஃ ஸ ஸுகீ நரஃ ॥(கீதை 5 - 23)

(ஷக்னோதீஹைவ ய: சோடும் ப்ராக் சரீரவிமோக்ஷநாத்
காமக்ரோதோத்பவம் வேகம் ஸ யுக்த: ஸ ஸுகி நர)
காமக்ரோதங்கள் வருவதற்கு ஹேதுக்கள் இருக்கையில், அந்த வேகத்தை இந்த ஜன்மத்தில் அடக்க பிரயத்னம் செய்யவேண்டும். அப்படிச் செய்கிறவன் தான் யுக்தன். யுக்தன் என்றால் யோகத்தோடு கூடியவன் என்பது அர்த்தம். யோகங்கள் எல்லாம் ரிக்ஷிகளுக்கு மாத்திரம் அல்ல. மருந்து யாருக்கு வேண்டும்? வியாதி உள்ளவனுக்கல்லவா வேண்டும்? ம்னோவ்யாதி நமக்கு இருக்கிறது. ஆகையால் நமக்குத்தான் இவை வேண்டும். மனது அடங்க வழி என்ன? இரண்டு ஸாதனங்கள் உள்ளன. பஹிரங்க ஸாதனம், அந்தரங்க ஸாதனம் என்று இரண்டு. அவற்றைப் பற்றித் தெரிந்தவர்களை நாம் கேட்கவேண்டும். மனதை அடக்கினவர்களைக் கேட்கவேண்டும். ஸ்ரீ க்ருஷ்ணபகவான் எப்போழுதும் மனது அடங்கினவர். நமது ஆசார்யாளும் மனது அடங்கினவர்கள். சிலபேர் பிறக்கும்பொழுதே சிவப்பாக இருக்கிறார்கள்.

சீமைக்குப்போய்ச் சட்டை முதலியவைகளைப் போட்டுக்கொண்டு சில பேர் சிவப்பு ஆகிறார்கள். பிறக்கிறபொழுதே பறக்கிற பிராணிகள் இருஇகின்றன. அப்புறம் பறக்கின்றவைகள் இருக்கின்றன. மீன் குட்டி பிறவியிலேயே நீந்துகிறது. நாம் கொஞ்ச நாள் கழித்து நீந்துகிறோம். இப்படிப் பிறவியிலேயே மனது கட்டுப்பட்டவர் ஈச்வரன். அவர் எப்பொழுதும் இருப்பவர். எப்பொழுதும் மனது நின்றுள்ளவர். நாம் எல்லோருக்கும் ப்ரயத்தனம் பண்ணி மனதை நிற்கச் செய்தவர்கள். வித்யாரண்யர், ஸதாசிவ ப்ரஹ்மேந்திரைகள் முதலியவர்கள். இந்த இரண்டு பேரும் வழி சொல்லியிருக்கிறர்கள். முன்பு இரண்டு வழி என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றில் ஒன்று பஹிரங்க ஸாதனம். அதாவது வெளியிலிருந்து உபகாரம் பண்ணுவது. தானம், தர்மம், ஸ்ந்த்யை, ஔபாஸனம், யக்ஞம், வேதாத்யயனம், பரோபகாரம் என்பவைகளைப் போன்றவைகள் பஹிரங்க ஸாதனங்கள். இவைகளை ச்ரத்தையோடு நன்றகப் பண்ணினால் மனது அந்தமாதிரி ஆகும்.

அந்தரங்க ஸாதனமென்பது கிட்ட இருந்து உபகாரம் பண்ணுவது. கோவில் பூஜாகாரியங்கள் ஆகவேண்டும். வண்டிக்காரன், மணியக்காரன் முதலியவர்கள் வெளியிலிருந்து ஸாதனம் ஆகிறார்கள். தீபாராதானை போட்டுக் கொடுப்பவன், நைவேத்யம் எடுத்து வைப்பவன் முதலியவர்கள் நெருங்கியவர்கள். அந்தரங்க சாதனங்கள் என்பவை இவர்களைப்போல் நெருங்கியவை. அவை பல. அவைகளில் ஒன்று அஹிம்ஸை. மனது சொன்னபடி கேட்க அஹிம்ஸை ஒரு ஸாதனம். மனதினால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை. அது கட்டுப்படாததினால் ஒன்றும் செய்ய யோக்யதை

இல்லாமலிருக்கிறது. யானை கட்டுபடாவிட்டால் நமக்கு ஒன்றும் பிரயோஜனமில்லை. உபத்ரவம்தான் உண்டு. கட்டுப்ப்ட்டுவிட்டால் எவ்வளவோ காரியங்களை ஸாதித்துகொள்ளலாம். இந்த மனது எவ்வளவோ யானை பலம் உடையது. விச்வாமித்ரர், ஹநுமான் முதலியவர்கள் மனோஜயம் பண்ணினவர்கள். அதனால் தான் அவர்களுக்கு அவ்வளவு சக்தி இருந்தது. அந்த மனதுதான் நம்மிடம் இருக்கிறது. அது சொன்னபடி கேட்கச் செய்தால் நாமும் எது வேண்டுமானாலும் பண்ணலாம். ப்ரபஞ்சம் முழுவதும் ஒரு மனதால் ச்ருஷ்டிக்கப்பட்டது, என்று வேதாந்தம் சொல்லுகிறது. எறும்பினுடைய சின்ன மனதுக்குக்கூட இந்தப் ப்ரபஞ்சம் போதாது.

மனது ஒரு பூதம் போன்றது. விக்ரமார்க்கன் கதையில் சொல்லப்பட்ட வேதாளத்தைப் போன்றது. வேதாளம் கட்டுப்ப்ட்ட பின்பு எவ்வளவு காரியங்களைச் செய்ததோ அதைப்போலவே மனதும் செய்யும். அந்த மனதை நமது ஸ்வாதீனப்படுவதைத்துவது தான் யோகமென்பது. அந்த யோகத்திற்கு அங்கம் அஹிம்ஸை மனதை வசப்படுத்தியவர்கள், அஹிம்ஸையை அனுஸரித்தொம், மனது வசப்பட்டது என்று சொல்லுகிறார்கள்.

ஆகவே, இந்த அஹிம்ஸையானது மனுதர்மசாஸ்த்ரத்தில் ஸாமான்ய தர்மங்களில் ஒன்றாய் சொல்லப்பட்டிருக்கிறது. யோக சாஸ்த்ரத்தில் யோகத்துக்கு அங்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அஹிம்ஸையின் பெருமை நன்றாக விளங்குவதற்காக இவ்வளவு விரிவாக சொல்லப்பட்டது.

ஒரு முக்கிய ப்ரயோஜனத்திற்காக ஒரு காரியம் செய்தால் வேறு சில ப்ரயோஜனங்களும் உண்டாகும். அவற்றிற்கு அவாந்தர ப்ரயோஜனம் என்ற பெயர். மடத்திற்கு பூஜை தர்சனம் செய்யப் போனோம். பூஜை தர்சனத்தோடு பல சாஸ்த்ரிகளுடைய உபன்யாசங்களைக் கேட்டோம். இனை தாமாகவே நேர்பவை. நமது உத்தேசம் இவைகள் அல்ல. அநேகம் பேர்களைப் பார்க்கிறோம். பல வித்வான் க்ளையும் பக்தர்களையும் பார்க்கிறோம். இவை எல்லாம் உத்தேசிக்காத ப்ரயோஜனம். பூஜைதர்சனம் முக்ய ப்ரயோஜனம். மற்றவைகளெல்லாம் அவாந்தர ப்ரயோஜனங்கள்.

அஹிம்சைக்கும் சில அவாந்தர ப்ரயோஜனங்கள் உண்டு. அஹிம்சையின் முக்ய உத்தேசம் சித்தம் அடக்குவது. அது தான் முக்ய ப்ரயோஜனம். அதைத் தவிற அவாந்தர ப்ரயோஜனம் வேறு கிடையாது.

சுஹிංஹா வுதிஷாயாං தத்ஸநிடிள வெொரதுாமஃ॥ (பர்தஞ்சல யோகஸூத்ரம்)

(அஹிம்ஸா வ்ரதிஷ்டாயாம் தத்ஸந்நிதள வைரத்யாக:)
என்று யோகஸூத்ரம் சொல்லுகிறது. அஹிம்சையை திரிகரணங்களாலும் ஸாதித்துவிட்டோமானால் நமக்கு எதிரில் யாவரும் சாந்தம் அடைவார்கள்.

ஒருவன் மற்றொருவனைக் கஷ்டப்படுத்த நினைக்கக் கூடாது. வாயாலும் ஒருவனுக்குக் கஷ்டத்தைத் தரும் பேச்சைப் பேசக்கூடாது. அப்படியே சரீரத்தாலும் யாவருக்கும் ஹிம்ஸையைச் செய்யக் கூடாது. ஸ்வபாவத்தில் ஒருவனுக்கும் பரஹிம்ஸை பண்ணத் தோற்றாது. ஆனால் பிறர் ஏதாவது குற்றம் செய்தால் கோபத்தினால் ஹிம்ஸை பண்ணத் தோற்றும். நம்முடைய குழந்தை கூரையில் நெருப்பு வைத்துவிட்டால் அப்பொழுது அதை கொபித்துக் கொள்வோமா? உடனே நெருப்பை அணைப்போம். நாளை முதல் அப்படி நேராமல் பார்த்துக் கொள்வோம். அதைப் போலவே துன்பம் பண்ணுகிறவனிடத்திலும் நடக்கவேண்டும். குழந்தையைப் போலவே அவனை பாவிக்கவேண்டும். அதுதான் அஹிம்ஸை. அந்த அஹிம்ஸையால் சித்தவ்ருத்தி அடங்குவது முக்கிய ப்ரயோஜனம். அதைத் தவிர, அவனுக்கு எதிரில் கொலை பண்ணவேண்டும் என்று வரும் கோபம் உடையவர்கள் கூடச் சாந்தம் அடைவார்கள். அவன் இருக்கும் இடத்தில் க்ரூரமானவர்-களுக்கும் மனதில் சாந்தம் உண்டாகும். அதுதான் அஹிம்ஸையின் அவாந்தர ப்ரயோஜனம். அது தானாக வரும்.

வர்ணாச்ரம தர்மங்களில், ப்ராஹ்மண வர்ணத்திற் பிறந்து ஸந்யாஸ ஆச்ரமத்தை உடையவர்கள் அஹிம்ஸையைப் பூர்ணமாக அனுஷ்டிக்க வேண்டும். ஸந்யாஸம் வாங்கிக்கொள்ளும் பொழுதே அவர்கள்,

சுஹிංஸநு ஸவூநஹூதாந௱ந௱த௺ தீயெூஸ௱ஃ ॥(சாந்தோக்ய உபநிஷத்)

(அஹிம்ஸன் ஸர்வனஹூதான்ய்ன்யத்ர தீர்தப்ய:)

என்று ப்ரதிக்ஞை செய்து கொள்கிறார்கள். ஸகல ப்ராணிகளுக்கும் என்னால் பயமில்லை, என்பது அதன் தாத்பர்யம்.

க்ரஹஸ்தன் ஸ்வதர்ம விஷயத்தைத் தவிர மற்றவற்றில் அஹிம்ஸையை அனுஷ்டிக்க வேண்டும். வேதத்தில் சொல்லப்பட்ட க்ரியைகளில் ஹிம்ஸை இருக்கலாம். ஆதலால் அந்தக்ரியைகளைத் தவிர மற்றவற்றில் அவன் அஹிம்ஸானுஷ்டானம் செய்யவேண்டும். கௌதம தர்ம ஸூத்ரத்திலும், சாந்தோக்ய உபநிஷத்திலும் இந்த அஹிம்ஸையைப் பற்றிய விஷயங்கள் சொல்லப்படுகின்றன. வேத விஹித கர்மாக்களில் தவிர மற்றவற்றில் க்ரஹஸ்தன் அஹிம்ஸையைக் கைக்கொள்ளவேண்டும். பூர்ணமாக அனுஷ்டானம் செய்யவேண்டியது ஸந்யாஸியின் கடமை. அவன் சமையல் பண்ணக்கூடாது; இலை பறிக்கக் கூடாது; அதைப் போன்ற வேறு காரியங்களையும் செய்யக்கூடாது.

2. ஸத்யம்:- ஸத்யத்திற்கு லக்ஷணம் ஒன்று உண்டு.

வாஜூநஸயொாரெகூரூவ௱ம் ஸத௱ ॥

(வாங்மனஸயோரைகரூப்யம் ஸத்யம்)

மனதும் வாக்கும் ஒரே விஷயத்தைச் செய்வதுதான் ஸத்யம். மனதில் உள்ளதைச் சொல்லத்தான் பகவான்நமக்கு வாக்கைக் கொடுத்திருக்கிறார். வாக்கை அஸத்தியத்திற்கு உபயோகப்படுத்தினால் மாடாகப் பிறக்க வைப்பார். அஹிம்ஸையில் எப்படி க்ரஹஸ்தனுக்கு ஒரு விலக்கு இருக்கிறதோ, அப்படி ஸத்யத்திற்கும் ஒரு விலக்கு உண்டு. அஹிம்ஸையிலுள்ளது க்ருஹஸ்தனுக்கு மட்டுந்தான். இது எல்லாருக்கும் உண்டு.

ஊரிலுள்ளவர்களின் தப்புக்களையெல்லாம் ஒருவன் எடுத்துச் சொல்கிறான். "அவன் அயோக்யன்; அவன் அங்கே நின்றான்; இவன் இது செய்தான்" என்று அவன் சொல்லுகிறான். அவன் சொல்லுபவை எல்லாம் நிஜமாக இருக்கலாம். அது வாக்கு மனதுகளின் ஐக்யமாக இருந்தாலும் ஸத்யம் ஆகாது.

സത്യം ഭൂതഹിതം പ്രിയഃ ॥

(ஸத்யம் பூதஹிதம் ப்ரியம்)

என்று சொல்லப்பட்டிருக்கிறது. மனதிலுள்ளது வாக்கில் வரவேண்டுமென்பது பொது லக்ஷணம். எதற்காக மனதிலுள்ளதை வாக்கினால் சொல்லவேண்டும், என்பதை யோஜிப்போம். இந்தக் கார்யங்கள் எல்லாம் நன்மையை உண்டாக்கவே செயல்படுகின்றன. சத்யமும் நல்லதை உண்டாக்கவேண்டும். நல்லது உண்டானால் அது ஸத்யம். கெடுதல் ஏற்பட்டால் அது ஸத்யமாகாது. ஸத்யமானது எல்லா ஜீவன் களுக்கும் க்ஷேமகரமாக இருக்கவேண்டும். காமத்தினாலும் க்ரோதத்தினாலும் ஸத்யம் வரக்கூடாது. ஒருவனுடைய குற்றத்தை எடுத்துச் சொல்லி தூஷிக்கவேண்டும்; அவனுடைய பெருமையைக் குறைக்கவேண்டும், என்ற ஆசையோடு சொல்லப்படும் வார்த்தைகள் உண்மையானவைகளாக இருந்தாலும் ஸத்யமல்ல. ஸத்யத்தால் ஒருவனுக்கு தாபம் உண்டாகக் கூடாது. கஷ்டம் உண்டாகக் கூடாது. நமக்காவது வேறு பிராணிக்காவது க்ஷேமத்தை உண்டாக்கவேண்டும். அப்படி உள்ள ஸத்ய வார்த்தைகளையும் சொல்லும்போது சாந்தமாகச் சொல்லவேண்டும். கேட்பவர்களுக்கு அவை ஹிதமாக இருக்கவேண்டும். இவை வாக்கினால் சொல்லப்படும் ஸத்யம்.

மனதினாலும் ஸத்யத்தை அனுஷ்டிக்கவேண்டும். பொய் சொல்ல நினைக்ககூடாது.

ஸ்நானம் பண்ணாமல், ஸ்நானம் பண்ணியவனைப் போல நடித்தல் முதலிய காரியங்கள் உடம்பாற் செய்யப்படும் அஸத்யம். த்ரிகரணங்களாலும் ஸத்யமாக இருக்கவேண்டும். சித்தவ்ருத்தி நிரோதத்திற்கு அதுவும் ஒரு காரணம்.

ஸத்யத்திற்கும் ஓர் அவாந்தரப் பிரயோஜனம் உண்டு. ஸத்யத்தையே சொல்லி சொல்லி பழக்கம் பண்ணிவிட்டால் மனது ஸத்யத்தையே நினைக்கும். வாக்கு ஸத்யத்தையே சொல்லும். அப்பொழுது சொல்லப்படுபவை எல்லாம் ஸத்யமாகவே ஆகிவிடும். உள்ளத்தையே சொல்லும் வாக்கின்படி எல்லாம் இருக்கும். தவறிச் சொன்னாலும் அப்படியே நடந்துவிடும். வார்த்தை ஸித்தியாவது ஸத்யத்தினால்தான். வாக்கிலிருந்து வந்தது உள்ளதாய்விடும் சக்திதான் சாபானுக்ரஹசக்தி. ஸத்யம் பேசுபவர்கள் இன்றைக்குப் பூர்ணிமை என்றால் சந்திரன் அப்படியே வந்து நிற்பான். நிக்ரஹானுக்ரஹ சக்தி உண்டாகும்.

பணத்தில் நமக்கு ஆசை இல்லை, என்று தோன்றுகிறது. அதற்கு அடையாளம்? கனவிலும் பணம் வேண்டாம் என்ற நினைவிருந்தால், அந்த ஆசை இல்லாதது ஸ்திரமென்று நம்பலாம். கனவில் பணத்தை ஒருவன் கொடுத்தால், 'கொண்டுவா' என்று சொன்னால் அது தப்பு. அதைப்போலக் கனவிற்கூட ஸத்யத்தைக் கைவிடாத ஸ்திரபாவம் வேண்டும். அப்பொழுது ஸத்ய ஸித்தி உண்டாகும். நாம் சொல்லுவதெல்லாம் நடக்கும்.

𑌸𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌫𑌲𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑍍𑌵𑌮𑍍 ॥ (யோகஸூத்ரம்)

(ஸத்யப்ரதிஷ்டாயாம் க்ரியாபலாஸ்ரயத்வம்)
இந்த அவாந்தரப்பிரயோஜனத்தை உத்தேசித்து ஸத்யத்தை அனுஷ்டிக்கக்கூடாது.

வைராக்கியம் என்று ஓர் அந்தரங்க ஸாதனம் இருக்கிறது. ஆசையில்லாமை என்பதுதான் அதன் அர்த்தம். அது மஹா பலமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதனுடைய அவாந்தரப் பலம் புதையலெல்லாம் கண்ணுக்குத் தெரியும் சக்தி. நான் வைராக்கியமுடையவன், எனக்குப் புதையல் தெரியவில்லையே, என்று ஒருவன் சொன்னால் அவனுடைய வைராக்கியம் எப்பேர்ப்பட்டது என்பது நன்றாக தெரிகிறது. புதையலை எதிர்ப்பார்த்தால் அவன் உண்மை வைராக்கியத்தை உடையவனாகமாட்டான்.

அதைப்போலவே ஸத்யத்தினுடைய அவாந்தரப் பிரயோஜனத்தை உத்தேசித்து அதை நாம் அனுஷ்டிக்கக்கூடாது.

3. அஸ்தேயம்:- அநியாய ஆசை நமக்கு இருக்கக்கூடாது. 'அஸ்தேயம்' என்றால் திருடாமல் இருப்பது என்று அர்த்தம். மற்றவன் ஸொத்தை ஏமாற்றிப் பெறக்கூடாது; அடித்துப் பிடுங்கக் கூடாது. எல்லாவற்றையும்விட, கடிதத்தில் மூலமாகத் திருடுவது மிகவும் மோசமான காரியம்.

4. சௌசம்:- சரீரசுத்தி மன சுத்தியை உண்டாக்கும். சரீரசுத்தத்திற்கு ஏற்பட்ட காரியங்கள் தர்மசாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்பொழுது 40 அல்லது 50 வருஷங்காலமாக சௌசம் நமது தேசத்தில் தவறி இருக்கிறது.

இன்ன இன்ன காலங்களில் இன்ன இன்ன பதார்த்தங்களைக்கொண்டு சரீரத்தைச் சுத்தி செய்துகொள்ளவேண்டும், இன்ன இன்ன பாத்திரங்களை இன்னவிதம் சுத்தம் செய்யவேண்டும், எனற விஷயங்கள் சாஸ்த்ரங்களிற் காணப்படுகின்றன. சுத்தம் எல்லாவிதமான கர்மாக்களுக்கும் முதலில் அவசியம். அது தவறாமல் இருக்கவேண்டும். இப்பொழுது நாம் மறந்துபோனாலும் தெரிந்து கொண்டு அனுஷ்டானம் செய்யவேண்டும். இதைக்கூட நாம் ஸரியாக செய்யாவிட்டால் மனதை எப்படி அடக்குவது?

இவைகளைக் காதில் கேட்டுவிட்டுப் போவதுமட்டும் அல்லது புஸ்தகங்களில் படித்துவிட்டுப் போவதுமட்டும் ப்ரயோஜனமில்லை. கார்யத்திற் செய்யவேண்டும். நாம் க்ஷேமமாயிருக்கவேண்டுமானால் சுத்தமாக இருக்கவேண்டும். குழந்தைகள் முதற்கொண்டு வ்ருத்தர்கள் வரையில் தங்கள் தங்களுக்கென்று ஒவ்வொரு செம்பு தனித்தனியே வைத்துக்கொள்ள வேண்டும். அதைக்கொண்டே சுத்தி செய்துக்கொள்ளவேண்டும். தீர்த்த பாத்ரம் தனித்தனியே வைத்துக்கொள்ளவேண்டும். மற்றவன் பாத்திரத்தில் தீர்த்தம் வாங்கி குடிக்ககூடாது. அந்தந்தபாத்ரம் செய்யப்பட்ட லோஹத்திற்குத் தக்கப்படிச் சொல்லப்பட்ட பதார்த்தங்களால் சுத்தி செய்யவேண்டும். வெள்ளிப் பாத்திரமென்றால் அதற்குச் சொல்லப்பட்ட வஸ்துவால் அதைச் சுத்தி செய்யவேண்டும். தாமிரம் முதலியவைகளானால் அதற்கேற்படி சுத்தி செய்யவேண்டும். எங்கே சாப்பிடப் போனாலும் நம்முடைய தீர்த்த பாத்திரத்தை எடுத்துக்கொண்டு போக வேண்டும். மற்றவன் பாத்திரத்தை உபயோகிக்கக் கூடாது. இப்படி எல்லா ஜாதிகளும் செய்யவேண்டு. தங்கள்தங்கள் ஜாதிக்கேற்ற காரியங்களைச் செய்வதில் சுத்தமாக யாவரும் இருக்கவேண்டும்.

5. இந்த்ரிய நிக்ரஹம்:- நம்முடைய இந்த்ரியங்களை அவைகளின் போக்கிலே விட்டுவிடக் கூடாது. ஒவ்வோர் இந்த்ரியத்திற்கும் இவ்வளவுதான் ஆஹாரம் கொடுக்கவேண்டுமென்று கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும். அனுபவம் அந்தக் கணக்குப்படி இருக்கவேண்டும். மீறினால் அவற்றையடக்கும் சக்தி வேண்டு.

மேற்சொன்ன ஐந்தும் ஆஸ்திக மதத்தை அனுஷ்டிப்பவர்களுக்கும் வைதிக மதத்தை உடையவர்களுக்கும் ப்ரதான தர்மங்கள் ஆகும். இவைகள் தாம் முக்யமான ஸாமான்ய தர்மங்கள்.